ஸ்ரீ:

# திருச்சின்ன மாலை

## தனியன்

மன்னு திருமந்திரத்தின் வாழ் துவயத்தின் பொருளும்*
தன்னு புகழ் கீதைதனில் சொன்னவெண் நான்கின் பொருளும்*
அன்னவயல் கச்சி அருளாளர் திருச்சின்ன வொலி*
இன்னபடி என்றுரைத்தான் எழில் வேதாந்தாரியனே.

ஏகாந்த மூன்றுமெழிலால் உரை செய்து*
மாகாந்தஞ் செய்தருளும் வள்ளலாய்* – சாகாந்த–
தேசிகனும் தூப்புல் திருவேங்கடேச குரு*
வாசகமே எங்களுக்கு வாழ்வு.

பரிச்சின்னமான இரு நாலெழுத்தின்பல் வண்மையெல்லாம்*
விரிச்சு நலம் பெற ஓத வல்லோர்க்கு இந்த மேதினிக்கே*
மரிச்சின்ன மீளப் பிறவாமல் வாழ்விக்குமால் வரதர்*
திருச்சின்ன ஓசை இனிமையுண்டோ* மற்றைத் தேவருக்கே.

1:##
ஈருலகைப் படைக்க எண்ணியிருந்தார் வந்தார்*
 எழில் மலரோன் தன்னை அன்றே ஈன்றூர் வந்தார்*
மாருதம் மண் நீர் ஆகும் மாயோர் வந்தார்*
 வானோடு எரி தாமாகும் மறையோர் வந்தார் *
சூரியர் தம்முடன் துலங்கு தூயோர் வந்தார்*
 சுரர்களுக்கு அன்று அமுது அருள் சுந்தரனூர் வந்தார்*
வாரிதி சூழ் வையகம் வாழ்வித்தார் வந்தார்*
 வண்மையுடன் வரம் தருவார் வந்தார் தாமே. (2)

2:
அருமறையை ஊழிதனில் காத்தார் வந்தார்*
 அதுதன்னை அன்று அயனுக்கு அளித்தார் வந்தார்*
தரும வழி அழியாமல் காப்பார் வந்தார்*
 தாமரையாளுடன் இலங்கும் தாதை வந்தார் *
திரு உரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் வந்தார்*
 திரு அருளால் செழுங்கலைகள் தந்தார் வந்தார்*
மருவலர்க்கு மயக்கு உரைக்கும் மாயோர் வந்தார்*
 வானேற வழிதந்தார் வந்தார் தாமே.

3:
அனைத்து உலகும் காக்கும் அருளாளர் வந்தார்*
 அனைத்துக்கும் அதிபதியாய் நிற்பார் வந்தார்*
தினைத்தனையும் திருமகளை விடாதார் வந்தார்*
 தேசொத்தார் மிக்காரும் இல்லார் வந்தார் *

நினைக்க நமக்கு இன்னறிவு தந்தார் வந்தார்*
 நிலைநின்ற உயிர் தோன்ற நினைந்தார் வந்தார்*
எனக்கிவர் நானிவர்க்கென்ன இனியார் வந்தார்*
 எழுத்தொன்றில் திகழ நின்றார் வந்தார் தாமே.

4:
நாம் வணங்கத் தாம் இணங்கா நிற்பார் வந்தார்*
 நம்மை அடைக்கலம் கொள்ளும் நாதர் வந்தார்*
நாம் எமக்காம் வழக்கெல்லாம் அறுத்தார் வந்தார்*
 நமக்கிதுவென்று உரையாமல் வைத்தார் வந்தார் *
சேமமெண்ணி எம்மை அன்பர்க்கு அடைந்தார் வந்தார்*
 செழுந் தகவால் நின் சரணும் ஈசர் வந்தார்*
தாமனைத்தும் தீவினையைத் தவிர்ப்பார் வந்தார்*
 தமக்கேயாம் எமைக் கொள்வார் வந்தார் தாமே.

5:
உலகெல்லாம் உள்ளேவைத்து உமிழ்ந்தார் வந்தார்*
 உலகுடம்பாய்த் தாமுயிராய் நின்றார் வந்தார்*
அலைகடலாய் ஆனந்தம் அடைந்தார் வந்தார்*
 அளவில்லா வருளாழிப் பெருமாள் வந்தார் *
திலகமெனும் திருமேனிச் செல்வர் வந்தார்*
 செழுங் குணங்கள் இருமூன்றும் உடையார் வந்தார்*
இலகுசுடர் முழுநலமாம் இனியார் வந்தார்*
 எல்லார்க்கும் கதியானார் வந்தார் தாமே.

6:
அருளாலே விலங்கிரண்டும் அழிப்பார் வந்தார்*
 அஞ்சிறையைக் கழித்தருளும் அன்பர் வந்தார்*
மருள் வாரா வகை நம்மைக் காப்பார் வந்தார்*
 வானேற வழிநடத்தி வைப்பார் வந்தார்*
தெருளாரும் தெளிவிசும்பு தருவார் வந்தார்*
 திண்கழற்கீழ் வாழ நமக்கு அருள்வார் வந்தார்*
பெருவானில் அடிமை நம்மைக் கொள்வார் வந்தார்*
 பிரியாமல் காத்தளிப்பார் வந்தார் தாமே.

7:
அகலகில்லாத் திருமகளார் அன்பர் வந்தார்*
 அடியிரண்டும் ஆருகத் தந்தார் வந்தார்*
புகலில்லார் புகலாகும் புனிதர் வந்தார்*
 பொன்னுலகில் திருவுடனே திகழ்வார் வந்தார் *
அகிலமெலாம் ஆனந்தம் ஆனார் வந்தார்*
 அடியிணைக்கீழ் வைத்தடிமை கொள்வார் வந்தார்*
பகல் நடுவே இரவழைக்க வல்லார் வந்தார்*
 பகலொன்றாய் இரவழித்தார் வந்தார் தாமே.

8:
தருமன் விடத் தான் தூது போனார் வந்தார்*
 தரணி பொருத் திண்பாரம் தவிர்த்தார் வந்தார்*
அருமறையின் பொருளனைத்தும் விரித்தார் வந்தார்*
 அஞ்சின நீ என்னை அடைஎன்றார் வந்தார் *
தருமமெலாம் தாமாகி நிற்பார் வந்தார்*
 தாமேநம் வினையனைத்தும் தவிர்ப்பார் வந்தார்*
பரமெனது நீபுலம்பல் என்றார் வந்தார்*
 பார்த்தனுக்குத் தேரூர்ந்தார் வந்தார் தாமே.

9:
வஞ்சனை செய் பூதனையை மாய்த்தார் வந்தார்*
 மல்லர் மதகரிமாள மலைந்தார் வந்தார்*
கஞ்சனைப் போர் கடுஞ்சினத்தால் கடிந்தார் வந்தார்*
 கண்ணுதல் முன் வாணன் தோள் கழித்தார் வந்தார் *
வெஞ்சொல்தர வீடு கொடுத்து உகந்தார் வந்தார்*
 விலக்கில்லா வழிநடத்த விரைந்தார் வந்தார்*
பஞ்சவரைப் பலவகையும் காத்தார் வந்தார்*
 பாஞ்சாலி குழல் முடித்தார் வந்தார் தாமே.

10:##
அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார்*
 ஆனைபரி தேரின் மேலழகர் வந்தார்*
கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்*
 கருத வரம் தருதெய்வப் பெருமாள் வந்தார் *
முத்தி மழை பொழியு முகில் வண்ணர் வந்தார்*
 மூலமென வோலமிட வல்லார் வந்தார்*
உத்தர வேதிக்குள்ளே உதித்தார் வந்தார்*
 உம்பர்தொழும் கழலுடையார் வந்தார் தாமே. (2)

11:##
மறைத்தலையில் இசையெழுத்தில் வணங்கும் வாக்கில்*
 மந்திரத்தில் நாலெழுத்தாம் திரு நாமத்தில்*
நிறைத்திலகு வேற்றுமையில் இரண்டாம் ஒன்றில்*
 நெடுமால் தன் கீதையெலாம் நிறைந்த சொல்லில் *
உறைத்தவர் கண்டுரைத்த பொருளான எல்லாம்*
 உயர்விரத அருளாளப் பெருமாள் தேசின்*
திறத்திலியை திருச்சின்ன மாலை பத்தும்*
 செவிக்கினிதாம் சிற்றின்பம் இசையாதார்க்கே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.